**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண். 29/2026**

2026—ம் வருடம் பிப்ரவரி திங்கள் 27—ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1—வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **ராதாகிருஷ்ணன்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:—**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். வாதியின் ஆதார் அடையாள அட்டை புகைப்பட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.07.2024 தேதியிட்ட வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.12.2025 தேதியிட்ட வாதி வழக்கறிஞர்

மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.12.2025 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 26.12.2025 தேதியிட்ட பிரதிவாதி மற்றொரு முகவரியில் பெற்றுக்கொள்ளமால் திரும்பிய அறவிப்பு வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 02.01.2026 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.01.2026 தேதியிட்ட தாவா சொத்துக்கான வில்லங்க சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.27 18:45:39 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.